1994 நவம்பர் 10]

98—

கூட்டுறவுத் துறைக்கு ஆணையம் அமைத்தல்.

***35680**—**திரு. எச். எம். ராஜு**: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவுத் துறைக்கென்று தனியாக ஆணையம் ஒன்று அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் *(ஆ)*: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆணையம் என்பதை, எதை உள்ளத்தில் வைத்து கேள்வியைத் தொடுத்து இருக்கிறார் என்று புரியவில்லை. அவர், கமிஷன் என்ற அடிப்படையிலே ஆணையம் என்று சொல்லி இருப்பாரேயானால், ஆணையம் என்பது ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக, காரியத்திற்காக உருவாக்கப்பட்டு, அந்த நோக்கமும் காரியமும் நிறைவேற்றப்பட்ட உடனே, அந்த ஆணையம் கலைக்கப்படும். எனவே, கூட்டுறவுத் துறையின் மூலமாக தனியாக ஒரு ஆணையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எச். எம். ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்ட கேள்வி, கூட்டுறவுத் துறைக்கென்று தனியாக ஒரு கார்ப்பரேஷன் அமைக்கப்படுமா என்று கேட்டிருந்தேன். அது ஆணையமாக ஆகி இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுவார்களேயானால், அதைக் குறித்து இரண்டொரு வார்த்தைகள் பேசக் கடமைப்பட்டிருக்கிறேன் ......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கார்ப்பரேஷன் குறித்து நீங்கள் கேட்கலாம்.

திரு. எச். எம். ராஜு: கூட்டுறவே நாட்டுயர்வு என்பது நாம் எல்லோரும் அறிந்தது. அமரர் நேருஜி அவர்களின் பிறந்தநாளான...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் மூலக் கேள்வியிலேயே—ஒரிஜினலிலேயே—கூட்டுறவுத் துறைக்கென்று தனியாக ஆணையம்

ஒன்று அமைக்கப்படுமா என்றுதான் கொடுத்து இருக்கிறீர்கள். கார்ப்பரேஷன் என்று கேட்கவில்லை; ஆணையம் என்றுதான் கொடுத்து இருக்கிறீர்கள். பேசலாம்.

திரு. எச்.எம். ராஜூ: ஆசிய ஜோதி நேருஜி அவர்களின் பிறந்த நாளான நவம்பர் 14 முதல் 20 வரை நாடெங்கிலும் கூட்டுறவு வாரா விழா சிறப்பாகக் கொண்டாடுகிறோம். நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில் ஆயிரக்கணக்கான கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்கள் கூட்டுறவு வங்கிகளில் வைப்புத் தொகையாக வைத்து இருக்கிறோம். சுமார் 22 ஆயிரத்துக்கு மேல் ரேஷன் கடைகள் இயக்கப்படுகின்றன. ஒரு லட்சம் பேருக்கு மேல் அங்கே பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. எச். எம். ராஜூ: ஒரு கோடியே 38 லட்சத்து 26 ஆயிரம் குடும்பக் கார்டுகள் இந்தத் துறையின் மூலமாக பயன்பட்டு வருகின்றன. ஆகவே, நமது நாட்டிலுள்ள சில மாகாணங்களில் இந்த கார்ப்பரேஷன் அமைக்கப்பட்டு இருப்பதுபோல—அந்த கார்ப்பரேஷன்கள் எவ்வாறு செயல்படுகின்றன, அவைகளின் சிறப்பின் மூலம் நல்லவைகளை நாமும் இந்தத் துறையிலே செயல்படுத்த முடியுமா என்பதை ஆராய்ந்து, பரிசீலித்து, நம் மாநிலத்திலும் அதுமாதிரி கார்ப்பரேஷன் ஒன்று அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கார்ப்பரேஷன் என்கின்ற அளவில், இந்திய நாட்டில் வேறு எந்த மாநிலத்திலும் கூட்டுறவு கார்ப்பரேஷன் இருப்பதாகச் செய்திகள் இல்லை. என்றாலும் கூட, இன்றைக்கு கூட்டுறவு ஒன்றியம் என்கின்ற அந்த நிறுவனத்தின் மூலமாக, கூட்டுறவுத் துறையிலே இருக்கின்ற, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அத்தனை காரியங்களையும்--அந்த ஒன்றியம் 14 செயற் பதிவாளர்கள் மூலமாக—ஃபங்ஷனல் ரிஜிஸ்திரார் மூலமாக அந்த எல்லாவிதமான செயல்களையும் செய்து கொண்டு வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு கூட்டுறவு ஒன்றியம் என்று அமைக்கப்பட்டு, அனைத்து மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்களுக்கு மேலாக, மாநிலக் கூட்டுறவு ஒன்றியம் செயல்பட்டு வருகிறது. எல்லாவிதமான காரியங்களையும் அந்தக் கூட்டுறவு ஒன்றியம் செய்துகொண்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்ன புள்ளிவிவரங்களிலே சில மாற்றங்கள் இருக்கின்றன. இன்றைக்கு 20,912 கூட்டுறவுச் சங்கங்கள்

1994 நவம்பர் 10]

மூலமாகவும், பொது விநியோகத் துறை மூலமாகவும் நுகர் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அவற்றிலே 1,667 கூட்டுறவுச் சங்கங்களினுடைய பொது விநியோக முறையிலே நுகர் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மொத்தத்தில் இன்றைக்கு தமிழ்நாட்டில் ஒரு கோடியே 50 இலட்சம் குடும்ப அட்டைகள் இருக்கின்றன. அதிலே கூட்டுறவுத் துறையின் மூலமாக மட்டும் ஒரு கோடியே 30 இலட்சம் அட்டைகளுக்கு இன்றைக்கு நுகர்பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன என்கிற திருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. எச். எம். ராஜு.

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1994-ஆம் வருடம் செப்டம்பர் மாதம் கூட்டுறவுத் துறையால் வழங்கப்பட்ட புத்தகத்தில் ஒரு கோடியே 38 இலட்சத்து 26 ஆயிரம் குடும்ப அட்டைகள் பயன்பட்டு வருகின்றன என்று கண்டிருப்பதை தான் நான் சொல்லி இருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகமாகச் சொன்னார்கள். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கோப்பில் என்னுடைய இந்த துணைக் கேள்விக்குப் பதில் இருந்தால் சொல்லலாம். இத்துறை இதுவரையில் நடவடிக்கையெடுத்து நீக்கப்பட்ட போலி குடும்ப அட்டைகள் எண்ணிக்கை எவ்வளவு என்று இந்த மாமன்றத்திற்கு, கோப்பில் இருந்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் கூட இந்திய அரசால் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கையில் இந்தியாவிலேயே அனைத்து மாநிலங்களிலும் எவ்வளவு எண்ணிக்கையுள்ள போலி குடும்ப அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டன என்ற அறிக்கையை நாம் பார்த்து இருக்கிறோம். அப்படிப்பார்க்கிறபோது தமிழகத்தைப் பொறுத்தவரையில் 1991-ஆம் ஆண்டில் 5 இலட்சத்து 24,709 போலி குடும்ப அட்டைகளும், 1992-ஆம் ஆண்டில் 3 இலட்சத்து 13,775 போலி குடும்ப அட்டைகளும், 1993-ஆம் ஆண்டில் 44,328 போலி குடும்ப அட்டைகளும், இன்றைக்கு 1994-ஆம் ஆண்டு, கடந்த ஆறு மாதக் காலத்தில் 64, 107 போலி குடும்ப அட்டைகளும் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன என்கிற செய்தியை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[*1994 நவம்பர் 10*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 99, டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.*

99—

வாணியம்பாடி வட்டத்திலுள்ள ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குதல்.

24587—டாக்டர் ஜெ. பரந்தாமன்:

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாணியம்பாடி வட்டம், தேவலாபுரம் ஊராட்சி, எல். மாங்குப்பம் பாங்கிஷாப், வானகாரதோப்பு ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிட மக்களின் அடிப்படை வசதிகளை ஆய்வு செய்து குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்றிட ஆணையிட்டும், எந்த ஆட்சியாளரும் பார்க்க மறுத்த, தர மறுத்த பட்டாவை புறம்போக்கு இடங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிற ஆதிதிராவிட மக்களுக்கு வழங்கி, பட்டா புரட்சி செய்த, தாழ்த்தப்பட்ட ஆதி திராவிட மக்களின் ஒரே இதய தெய்வம், காவல் தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என் நன்றியைக் காணிக்கையாக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) தேவலாபுரம் ஊராட்சியைப் பொறுத்தவரையில், தோல் தொழில்களின் பெருநகரான ஆம்பூருக்கு சில அடி தூரத்தில் இதே பஞ்சாயத்தில் நிறைய தோல் தொழிற்சாலைகள் இருப்பதால், நிலத்தின் விலை மிக, மிக அதிகமாக இருப்பதால், நிலத்தின் உரிமையாளர்கள் மார்க்கெட் விலையை விட அரசு நிர்ணயிக்கிற விலை குறைவான விலையாக இருப்பதால் தர மறுக்கிறார்கள். தற்போது நீதிமன்றத் தடையாணையும் இருக்கிறது. மக்களைக் காப்பாற்ற டாக்டர் புரட்சித் தலைவி நீதிமன்றங்களைச்